1991 சனவரி 24] 10–50 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, விவசாயிகள்—மின் கட்டணத்தைக் கட்டாத விவசாயிகளுடைய பம்பு செட்டுகளின் மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டு விடுகிறது. அதன் பிறகு மின் கம்பிகள், கம்பங்கள் எல்லாவற்றையும்கூட அகற்றி விடுவார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைமை தமிழகத்திலே இருந்தது.

1—4—1979 வரையில் இப்படி மின்னிணைப்பு துண்டிக்கப்பட்ட விவசாயிகளுடைய எண்ணிக்கை சுமார் 36,500. மீண்டும் கலைஞருடைய ஆட்சி தமிழகத்திலே அமைந்த பிறகு ஒரு முடிவெடுத்து, அவர்கள் பாக்கியிருக்கிற தொகையைக் கட்டிவிட்டால் அவர்களுக்கு மின்னிணைப்பு கொடுத்துவிடலாம், ஏனென்றால், துண்டித்து கம்பங்களை அகற்றி விட்டால் அவர்களுக்கு மறுபடியும் சீனியாரிட்டி வராமல் போய்விடும். எனவே, அந்த சீனியாரிட்டியிலிருந்து அவர்களைக் காப்பதற்காக ஒரு வழிவகை செய்து 31–3–1990 முடிய—அந்த 31—3—1990-க்குள் தங்கள் பாக்கிகளைக் கட்டிவிட்டால் அவர்களுக்கு மின்னிணைப்பு தரப்படும் என்ற செய்தியைக் கலைஞர் அரசு அறிவித்தது. அதன்படி 10,328 பேர்கள் கட்டினார்கள். இருந்தாலும் பலர் கட்டவில்லை.

மீண்டும், மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் சொன்னதைப்போல, அவர்களுக்குக் கால நீட்டிப்புத் தர வேண்டுமென்று கேட்டார்கள். சென்ற ஆண்டு நிதிநிலை தொடர் கூட்டத்தில் மின் இலாக்காவின் மீது நடைபெற்ற விவாதத்தின் பொழுது அறிவித்தேன். 30–9–1990-க்குள் அவர்கள் தங்கள் பாக்கிகளைக் கட்டிவிட்டால், உடனடியாக மின்னிணைப்பு தரப்படும் என்று அறிவித்தேன். அதன் அடிப்படையில் 2,233 பேர்கள்தான் கட்டினார்கள். மீதி இருப்பவர்கள் அதைப் பற்றிக் கவலைப்படக் கூட இல்லை. காரணம் மின் கட்டணத்தைக் கட்ட வேண்டுமே என்கிற நிலைமை இருந்தது.

மாண்புமிகு முதல்வரவர்கள் விவசாயிகளுக்குப் பம்பு செட்டுக்கு இலவச மின்சாரத்தை அறிவித்த காரணத்தால், எப்படியும் இந்த ஒரிஜினலைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்பதில் இப்பொழுது பல விவசாயிகள் முன் வந்திருக்கிறார்கள். அரசுக்கு ஏராளமான மனுக்கள் வந்திருக்கின்றன. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். எனவே அரசு ஆய்ந்து, மீண்டும் அவர்களுக்குக் கால நீட்டிப்புத் தரலாமா என்பதை மாண்புமிகு முதல்வரவர்களோடு நான் கலந்து பேசினேன். முதல்வர் அவர்களும், அவர்கள் மீதி எவ்வளவு பேர்கள் இருப்பார்கள் என்று கேட்டார்கள். கிட்டத்தட்ட மீதி 24,000 பேர்கள் இப்படிப்பட்ட விவசாயிகள் இருக்கிறார்கள் என்று தெரிவித்தேன். எனவே, மீண்டும் ஒரு தவணை அவர்